பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை–6 அவர்களின்**
**செயல்முறை ஆணை**
**முன்னிலை: மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),**

ந.க.எண்.60099/நிபி8/1/2020 நாள்: 08.07.2021

பொருள்: நிர்வாகம் - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருமதி.எம்.மெர்லின்கிறிஸ்டி, (த/பெ.(அமரர்) திரு.ஜெ.மானேஷ், மருத்துவமனைப் பணியாளர், அரசு மருத்துவமனை, தாராபுரம், திருப்பூர் மாவட்டம்) – கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணி வரன்முறை – ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசாணை (நிலை) எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ2) துறை, நாள் 30.08.2010.
3) அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21.04.2017.
4) அரசாணை (3ப) எண்.9, மக்கள் நல்வாழ்வு மற்றும குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 14.03.2019.
5) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. நாள் : 26.02.2021.
6) அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 16.03.2021.
7) இவ்வியக்கக கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பணிநியமன ஆணை ந.க.எண்.57017/நிபி8/1/2017, நாள் : 26.09.2019.
8) இவ்வலுவலக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59651/நிபி2/2/2019, நாள் 30.09.2019.
9) ஈரோடு மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் கடித ந.க.எண்.5646/நி2/2020, நாள் : 04.12.2020.

*****

**ஆணை:**

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே காலமான திரு.ஜெ.மானேஷ் என்பவர் 28.03.1984 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 28.03.1985 தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 13.06.1956, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.06.2016 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகள் திருமதி.எம்.மெர்லின்கிறிஸ்டி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

(2.....

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, திருப்பூர் மாவட்டம், தாராபுரம், அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணிபுரிந்து பணியிடையே 13.09.2004 அன்று இயற்கையெய்திய திரு.ஜெ.மானேஷ் மகளும் வாரிசுதாரருமாகிய திருமதி.எம்.மெர்லின்கிறிஸ்டி (பிறந்த தேதி 03.04.1991) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500-62000/- நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 04.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.எம்.மெர்லின்கிறிஸ்டி என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-5இல் காணும் அரசாணைகளின்படி அவர் பணியில் இணைந்த நாளான 04.10.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ்.குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திருமதி.எம்.மெர்லின்கிறிஸ்டி,
இளநிலை உதவியாளர்,
அரசு தலைமை மருத்துவமனை, ஈரோடு.
-- இணை இயக்குநர் நலப்பணிகள், ஈரோடு மூலமாக

நகல்
இணை இயக்குநர் நலப்பணிகள், ஈரோடு.
நிர்வாகப் பிரிவு 2 (2 நகல்கள்)
நிர்வாகப் பிரிவு 2 (முதுநிலை)
இருப்புக் கோப்பு / உதிரி

5279/2021

தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் ... ஈரோடு-9
19 AUG 2021

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

19/8/21
Ddis No: 5775/E2/2021
19/8/2021
Copy communicated

S/o JDHS, Erode. dt. 19.8.2021
12771.

நிர்வாக அலுவலர் 19/8/2021
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்
ஈரோடு. எம்எப் 316.
19/8/2021

To
The Hospital Supdt,
Govt Head Quarters Hospital
Erode